இலங்கை
அரச இலட்சினை

Ref No :UN/HR/01/48

இலங்கை ஜனநாயக சோசலிஸ குடியரசின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சானது கொழும்பில் அமைந்திருக்கின்ற அனைத்து இராஜதந்திர பணிமனைகளுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு, எதிர்வரும் 48வது ஐக்கிய நாடுகள் தாபனத்தின் கூட்டத் தொடர் தொடர்பிலான சுருக்கக் குறிப்புக்களை இத்துடன் சமர்ப்பிப்பதில் பெருமிதம் அடைகின்றது.

இலங்கை ஜனநாயக சோசலிஸ குடியரசின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சானது கொழும்பில் நிலைபெற்றிருக்கின்ற அனைத்து இராஜதந்திர பணிமனைகளுக்கும் உயர் உத்தரவாதத்தை தருவதற்கு இதனை ஒரு தக்க சந்தரப்பமாக பயன்படுத்திக் கொள்ள விளைகின்றது.

கொழும்பு 31ஆந் திகதி ஆகஸ்ட் 2021

கொழும்பில் இருக்கின்ற அனைத்து இராஜதந்திர

பணிமனைகள்

இலங்கை

அரச இலட்சினை

முத்திரையிடப்பட்டுள்ளது

வெளிவிவகார அமைச்சு

இலங்கை ஜனநாயக சோசலிஸ குடியரசு

**மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில்**

**இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள ஆக்கப்பூர்வ செயற்பாடுகள்**

1. அரசியலமைப்பில் உறுதிசெய்யப்பட்டவாறாகவும் கடந்த தசாப்தங்களில் தன்னார்வத்தோடு ஏற்றுக் கொண்ட சர்வதேச கடப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் இலங்கை உறுதி கொண்டுள்ளது. தொடர்ந்தும் நாம், நிலைப்பேண் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை எய்துவதற்கு ஐக்கிய நாடுகள் தாபனத்தின் மனித உரிமைகள் பொறிமுறைகளுடன் ஒன்றுப்பட்டு செயற்படுவோம்.

2. இலங்கை மக்களின், குறிப்பாக வடக்கு கிழக்கை சேர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் உயிர் வாழ்வதற்கான உரிமை உள்ளிட்ட அடிப்படை உரிமைகளை தசாப்தங்களாக இல்லாது செய்த தீவிரவாதத்தை ஒழித்தோம். நாட்டில் சமாதானத்தையும் ஸ்தீரதன்மையையும் ஏற்படுத்தியதுடன் மோதலுக்கு பின்னரான நல்லிணக்கம் சார் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக; உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்தல், மில்லியன் கணக்கான மிதி வெடிகள் மற்றும் வெடிக்காத படைக்கல பொருட்களை அகற்றுதல், இராணுவ கட்டுப்பாட்டு காணிகளை விடுவித்தல், ஜனநாயக ரீதியிலான தேர்தல்களை நடாத்துதல், பொறுப்புக் கூறல் மற்றும் காணமலாக்கப்பட்டோர் தொடர்பில் பல ஜனாதிபதி ஆணைக்குழுக்களை நியமித்தல், சிறுவர் படைவீரர்கள் மற்றும் முன்னாள் எல்டிடியி போராளிகளுக்கு புனர்வாழ்வளித்தல் பாரியளவிலான உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை மேற்கொள்ளல், வாழ்வாதார வாய்ப்புக்களை ஊக்குவித்தல் மற்றும் மோதலினால் பாதிக்கப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்ட இடங்களில் பொருளாதார நடவடிக்கைகளை ஆரம்பித்தல் உள்ளிட்ட பணிகளை நாம் முன்னெடுத்திருக்கின்றோம்.

3. உள்நாட்டு மோதல்களின் பின்னணியில் எழுகின்ற சவால்களை பொருத்தவரையில் குறிப்பாக மோதலுக்கு பின்னராக எஞ்சியுள்ள பிரச்சினைகள் எந்தவொரு சமூகத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தாத வண்ணம் சர்வதேச சமூகத்தின் உதவியுடன் நீதியாகவும், நல்லிணக்கத்துடனும் தீர்கக் ப்பட வேண்டும். இழப்பீடுகளை வழங்குவதற்கும், காணமலாக்கப்பட்டோரை கண்டறிவதற்கும், பொறுப்புக்கூறலுடனான செயற்பாடுகளை முன்னெடுத்தல், தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமை மற்றும் சகல மக்களினதும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுதல் போன்றவற்றை உறுதி செய்ய சுயாதீன நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவை கடந்த கால நிலைகளை கருத்திற் கொண்டு சமூக ஒற்றுமையையும், நிலையாண சமாதானம் மற்றும் அபிவிருத்தி என்பவற்றை ஊக்குவிக்க அவசியமானதாகும்.

4. நாம் நிலைப்பேண் அபிவிருத்தி கொள்கை சட்டகத்தின் அடிப்படையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் அதேவேளை நிலைப்பேண் அபிவிருத்தி கொள்கை 16 யின் அடிப்படையில் சமாதானம் நீதி என்பவற்றை ஊக்குவிக்கும் உறுதியான நிறுவனங்கள் குறித்தும் செயற்படுகின்றோம். 2021ஆம் ஆண்டின் நிலைப்பேண் அபிவிருத்தி அறிக்கையின் படி 165 நாடுகள் பட்டியலில் இலங்கை 7 இடங்கள் முன்னேறி 87வது இடத்தை பெற்றுள்ளது.[1]

5. உலகின் பல்வேறு நாடுகளைப் போன்று இலங்கை கொவிட் 19 பரவல் தொற்று நிலைமைகளை எதிர்த்து போராடிக் கொண்டிருப்பதை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானதாக அமையும். இந்த பரவல் தொற்று நிலைமையானது ஆட்களின் நடமாட்டம் மற்றும் பொருளாதாரத்தை பெரிதும் பாதித்துள்ளது. இலங்கை அரசாங்கமானது கொவிட் தொற்றுக்கு எதிரான தடுப்பூசிகளை உரிய குழுக்களுக்கு வழங்கி வரும் அதேவேளை நாட்டின் சகல துறைகளும் சமத்துவமான முறையில் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதை உறுதி செய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளது. தொற்று நோய் நிலைமைகள் காணப்பட்ட போதிலும் உள்ளக பொறிமுறைகள் ஊடாக மனித உரிமைகள் சார் பிரச்சினைகள் குறித்து கணிசமான முன்னெடுப்புக்களை இலங்கை செய்து வருகின்றது.

6. மனித உரிமைகள் கவுன்சிலில் 2021 மார்ச் மாதம் ஏற்றுக் கொள்ளப்பட்ட 46/1 தீர்மானம் குறித்து இலங்கையின் நிலைப்பாடு யாதெனில், சம்பந்தப்பட்ட நாடென்ற வகையில்

---

[1] https://sdgindex.org/reports/sustainable-development-report-2021/

இலங்கையின் சம்மதம் இன்றி மனித உரிமை கவுன்சிலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு மேலதிக ஒரு வாக்கினால் நிறைவேற்றப்பட்ட ஒன்றாகும். குறித்த தீர்மானமானது, ஐக்கிய நாடுகள் தாபனம் மற்றும் மனித உரிமை கவுன்சிலுடன் இலங்கையின் தொடர்ச்சியான ஈடுபாடு மற்றும் சமாதானம், நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி, இலங்கையின் உள்நாட்டு சட்ட கட்டமைப்பிற்குள் பொறுப்புடைமையை கட்டியெழுப்பல் உள்ளிட்ட பிரச்சினைகளை தீர்ப்பதில் இலங்கையின் உறுதியானதும் தொடர்ச்சியானதுமான முன்னேற்றம் காணப்பட்ட போதிலும், சமர்ப்பிக்கப்பட்டது. இந்த தீர்மானமானது இலங்கை சமுதாயத்தை தனிமைப்படுத்தும் என்பதோடு பொருளாதார அபிவிருத்தி, சமாதானம் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றில் எதிர்மாறான விளைவுகளை இந்த சவாலான கொவிட் 19 தொற்றுநிலைமை காலத்தில் ஏற்படுத்தும் என இலங்கை கருதுகின்றது. உள்ளக பொறிமுறைகள் சோர்வின்றி முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் வெளியக தகவல் சேகரிப்பு பொறிமுறைகளை இலங்கை முற்றிலும் நிராகரிக்கின்றது. சம்பந்தப்பட்ட நாடென்ற வகையில் இலங்கையின் அனுமதி மற்றும் ஒத்துழைப்பின்றி வெளியக பொறுப்புக் கூறல் பொறிமுறைகள் மற்றும் அது சார் நடவடிக்கைகள் அரசியல்மயமாக்களோடு தொடர்புப்பட்டது என்பதால் அதன் நோக்கமான மனித உரிமைகள் சார் குறிக்கோள்களை அடைய முடியாது போகும் என்பதை சர்வதேச சமூகம் நன்கு அறியும். அத்தோடு, கொவிட் 19 தொற்று உள்ளிட்ட மனிதாபிமான செயற்பாடுகளுக்கு நிதி மிக அவசியமாக தேவைப்படும் நிலையில், நிதியானது அரசியல்மயமாக்கப்பட்ட ஜெனிவா முன்னெடுப்புக்களுக்கு அளிக்கப்படுவதை நியாயப்படுத்த முடியாது. உலக நாடுகள் பலவற்றில் காணப்படுகின்ற நிலைமைகளோடு ஒப்பிட்டு பார்க்கின்ற போது இத்தகைய சர்வதேச கவனம் இலங்கை மீது தேவை என்பதை இலங்கை நம்பவில்லை. சர்வதேச சமூகத்திற்கும் குறிப்பாக UNHRC இற்கும் வழங்கிய உறுதி மொழிகளை இலங்கை தொடர்ந்தும் மதிக்கின்றது என்பதோடு நீடித்த சமாதானத்தை எய்துவதற்கு நிறுவப்பட்டுள்ள சுயாதீன அமைப்புக்களுக்கு அதிகாரத்தையும் வழங்கியுள்ளது.

மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்ற செயற்பாடுகள் குறித்த சுருக்கம் பின்வருமாறு:

**காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP)**

01. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP) காணாமற்போன ஆட்களின் எண்ணிக்கையை உறுதிப்படுத்தும் பணிகளில் ஈடுப்பட்டுள்ளது. இந்த உறுதிப்படுத்தல் செயற்பாட்டினை கூடிய விரைவில் பூர்த்தி செய்தல் இதன் நோக்கமாகும். காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP) காணாமற் போனோர் குறித்த தகவல்களை உறுதி செய்துக் கொள்வதற்காக கடந்த சில மாதங்களாக இழப்பீட்டிற்கான அலுவலகம் (OR), உள்நாட்டு சட்ட அமுலாக்க அதிகாரச் சபைகள் மற்றும் குடிவரவு குடியகழ்வு திணைக்களங்களுடன் தனது தகவல்களை பகிர்ந்திருக்கின்றது.

   i. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (OMP) ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பதிவுகள் 21,374 ஆகும். தகவல் உள்ளீட்டு நடவடிக்கைகள் யாவும் நிறைவடைந்துள்ளன. தற்சமயம் பதிவுகளை தமிழில் இருந்து சிங்களம் மற்றும் ஆங்கிலத்திற்கு மொழிப் பெயர்ப்பு செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

   ii. 21,374 பதிவுகளில் 3742 பதிவுகள் பாதுகாப்பு படைகளிடமிருந்து கிடைக்கப் பெற்றவைகளாகும்.[2] ஆயுதப் படைகளில் இருந்து காணமல் போனவர்களுக்கான இழப்பீடுகளை வழங்கும் செயற்பாடுகள் தனியாக கையாளப்படுவதால் அப்பதிவுகள் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலக (OMP) பட்டியலில் இருந்து நீக்கப்படுகின்றன. 2,644 பதிவுகள் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலக சட்டத்தின் 27ஆம் பிரிவின் அதிகார வரம்பெல்லைக்குள் உள்ளடங்காது என இணங்காணப்பட்டுள்ளன. இரு தடவை பதியப்பட்ட பதிவுகள், நகற் பதிவுகள், இயற்கை அனர்த்தங்களோடு தொடர்புப்பட்ட பதிவுகள். மன ரீதியான பாதிப்புக்கள் மற்றும் சொந்த பிரச்சினைகள் காரணமாக காணமல் போனோர் தொடர்பான பதிவுகள்

[2] இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை உள்ளிட்ட ஆயுதப் படைகளால் காணாமல் போனவர்களின் பட்டியல் http://www.ompsrilanka.org/missing-persons

இதில் உள்ளடங்கும். இவ்வாறான பதிவுகள் நீக்கப்பட்டதன் பின்னர் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP) ஊடாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பதிவுகளின் எண்ணிக்கை 14,988 ஆகும்.

iii. சமீபத்தில் காணாமற் போனவர்கள் தொடர்பில் முன்னுரிமை அளிப்பதற்காக காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP) கிடைத்துள்ள 14,988 பதிவுகளை மூன்று வகுதிகளாக வகைப்படுத்தியுள்ளது. முதற் தொகுதியில் அல்லது முன்னுரிமை தொகுதியில் 2000 – 2021 ஆண்டுக்கு உட்பட்ட சம்பவங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இரண்டாம் தொகுதியில் 1981-1999 காலப்பகுதிய சம்பங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மூன்றாம் தொகுதியில் 1980 இற்கு முன்னரான சம்பவங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. முதல் வகுதிக்குள் உள்ளடங்கும் பதிவுகளை உறுதிப்படுத்துவற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக 11 விசாரணை அதிகாரிகளை நியமிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. உறுதிப்படுத்தலின் பின்னர் காணமற்போனோர் எண்ணிக்கை மேலும் குறையலாம் என எண்ணப்படுகின்றது.[3]

iv. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP) தனது சமீபத்திய பதிவுகளை உள்ளடக்கிய 6025 கோப்புக்களை உரிய அதிகாரச் சபைகளுக்கு வழங்கியுள்ளது (முதல் வகுதியில் உள்ள – கடந்த 20 வருடங்களுக்கு உட்பட்ட). முதல் வகுதிக்குள் உள்ள தகவல்கள் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலக இணையத்தளத்தில் பதியப்படும். காணாமற் போனவர்கள் குறித்து மூன்று மாதக் காலப்பகுதிக்குள் மேலதிக விபரங்களை வழங்கவும் அல்லது தகவல்களை புதுப்பிப்பதற்கும் ஊடகங்கள் வாயிலாக பொதுமக்கள் அறிவுறுத்தப்படுவார்கள்.

v. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் வலிந்து காணமல் ஆக்கப்பட்டோர் குழுவினால் (WGEID) சமர்ப்பிக்கப்பட்ட தெளிவில்லாத 2021 ஜுலை வரையிலான 6259 வழக்குகளை காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் பொறிமுறைகளுக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவதற்காக அத்தகவல்களை உறுதிப்படுத்துவதற்கும், மீள் பதிவுகளை இல்லாது செய்யவும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களுக்கு பதிலளிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

vi. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதிகளவான சமீபத்திய சம்பவங்களை உள்ளடக்கிய வழக்குகளை கருத்திற் கொண்டு செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்கு ஆறாவது பிராந்திய காரியாலாயம் 2021 ஆகஸ்ட் மாதம் கிளிநொச்சியில் தொடங்கப்பட்டுள்ளது.

**இழப்பீட்டிற்கான அலுவலகம் (OR)**

02. இழப்பீட்டிற்கான அலுவலகம் (OR) தீர்மானிக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு இழப்பீடுகளை தொடர்ந்தும் வழங்கி வருகின்றது. இழப்பீட்டிற்கான அலுவலகமானது இழப்பீட்டுக் கொள்கை மற்றும் வழிகாட்டல்களை வழங்கள், இழப்பீடு குறித்த விழிப்புணர்வை அதிகப்படுத்தல், பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை அடையாளம் காண்பதற்கு பாதிப்படைந்தோர் மைய அணுகுமுறைகளை ஏற்றுக் கொள்ளல், வாழ்வாதார கடன் உதவிகளை வழங்குதல் மற்றும் உளவியல் ரீதியலான உதவிகளை வழங்கும் ஆதரவுத்திட்டங்கள் போன்றவற்றை முன்னெடுத்து வருகின்றது.

i. 2018 ஆம் ஆண்டிக் 34ஆம் இலக்க இழப்பீட்டிற்கான அலுவலக சட்டத்தின் அடிப்படையில் இழப்பீடுகளை வழங்குவதற்கான கொள்கை வழிக்காட்டல்களுக்கு 2021 ஆகஸ்ட் 17ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள முக்கிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு திட்டத்தை அமுலாக்குவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் இது வழி செய்கின்றது.

---

[3] ..............................

ii. 2021 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் இழப்பீட்டிற்கான அலுவலகத்தின் செலவீனங்களுக்காக 900 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன் அதில் 800 மில்லியன் ரூபா (88.9%) நட்டஈடு வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 249.8 மில்லியன் ரூபாய் ஏற்கனவே இழப்பீட்டிற்கான அலுவலகத்தால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

iii. 2021 ஆகஸ்ட் 01ஆந் திகதியின் படி, இழப்பீட்டிற்கான அலுவலகத்தில் நிலுவையில் உள்ள மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 11,327 ஆகும். இதில் 1311 விண்ணப்பங்கள் மரணம் மற்றும் காயங்கள் தொடர்பானதாகும் என்பதோடு 10,016 கோரிக்கைகள் ஆதனங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பானதாகும்.

iv. நிலுவவையிலுள்ள 11,327 கோரிக்கைகளில், ஆகஸ்ட் 2021 வரையில் இழப்பீட்டிற்கான அலுவலகத்தால் செயற்படுத்த வேண்டி நிலுவையில் உள்ள கோரிக்கைகளின் எண்ணிக்கை 5760 ஆகும். மீதமுள்ள 5567 கோரிக்கைகள் தொடர்பில் செயலாற்றுவதற்கு தேவைப்படும் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரர்கள் கோரப்பட்டுள்ளனர்.

v. இந்த செயற்பாடுகள் அனைத்தும் 2020 மற்றும் 2021யில் ஜனவரி தொடக்கம் ஆகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் கொவிட் 19 தொற்று நிலைமைகளின் காரணமாக மோசமாக பாதிக்கபட்டன. 2021 ஜூலை 31 வரையில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு:

- மரணங்கள் குறித்த நட்டஈடு – 28,425,000 ரூபாய்கள் (283 கோரிக்கைகள் தொடர்பானது)
- ஆதன சேதங்கள் தொடர்பிலான நட்டஈடு 219,495,814 ரூபாய்கள் (3439 கோரிக்கைகள் தொடர்பானது.)
- காயங்கள் தொடர்பிலான நட்டஈடு – 2,125,000 ரூபாய்கள் (58 கோரிக்கைகள் தொடர்பானது)
- 2021 ஆண்டில் (ஜனவரி தொடக்கம் ஜூலை வரை) மொத்தமாக செலுத்தப்பட்ட நட்டஈடு – 250,045,814 ரூபாய்கள். (3,780 செயல்முறைப்படுத்தப்பட்ட கோரிக்கைகள்)

vi. 1986 காலப்பகுதி தொடக்கம் நட்டஈடு வழங்குவதற்கான இனரீதியான வன்முறை பாதிப்புக்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன.
பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த நட்டஈட்டு விபரம் பின்வருமாறு:

| 1987 தொடக்கம் 2021 ஜூலை 31 வரையில் செலுத்தப்பட்ட நட்டஈடு | | |
|---|---|---|
| இழப்பீட்டு வகை | செலுத்தப்பட்ட கோரிக்கைகள் | செலுத்தப்பட்ட தொகை (இலங்கை ரூபா) |
| மரணம் | 58,430 | 3,084,058,177 |
| காயம் | 15,858 | 328,593,685 |
| ஆதனம் | 54,686 | 4,747,923,135 |
| மொத்தம் | 128,974 | 8,160,574,997 |

vii. இழப்பீடுகளை வழங்கும் அரசினது நிலைப்பாடு குறித்த விழிப்புணர்வை அதிகப்படுத்துவதற்கும், பாதிக்கப்பட்டவர்களின் குறைகளை நிவர்த்தித்து நல்லிணக்கத்தை ஊக்குவித்து இலங்கையர் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கில் தகவல்களை கொண்டு சேர்க்க இழப்பீட்டிற்கான சபை பல செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.

- ➢ வினாவிடை கோவை பதிப்பிடப்பட்டு அவை பாதிக்கப்பட்ட சமூகத்திடையே பகிரப்பட்டுள்ளது.
- ➢ இழப்பீட்டு அலுவலகத்தின் இணையத்தளமானது தேவையான சகல விடயங்களையும் பெற்றுக் கொள்ளும் வண்ணம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.
- ➢ அடையாளங்காணப்பட்ட குழுக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் கால இடைவெளியில் நடாத்தப்படும்.

viii. பாதிக்கப்பட்ட நபர்களுக்கு கடனுதவிகளை வழங்குவதற்கான திட்டம் 2006 REPPIA இன் கீழ் இரண்டு அரச வங்கிகள் ஊடாக ஆரம்பிக்கப்பட்டு ஒரு வங்கியின் ஊடாக தற்போதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. கடன் மதிப்பீடு மற்றும் திட்ட முன்னெடுப்பு நிலைகள் குறித்து இழப்பீட்டு அலுவலகம் கண்காணித்து உதவிகளை வழங்கி வருகின்றது. எதிர்கால தேவைகள் குறித்து அறிந்துக் கொள்ள கடன் நிலைமைகள் அதன் யதார்த்த நிலைகள் குறித்த ஆய்வுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ix. தேவைகள் குறித்த மதீப்பீடுகளை மேற்கொள்ளல், வழக்கு முகாமைத்துவம் செய்பவர்களுக்கான பயிற்சிகள், தேவைகளை அடிப்படையாகக் கொண்டு மதீப்பிடுகளின் பின்னர் அரச சுகாதார ஊழியர்களுக்கு பரிந்துரைத்தல் என்பவற்றை உள்ளடக்கிய முழுமையான உளவியல் உதவித் திட்டமொன்றை இழப்பீட்டு அலுவலகம் உருவாக்கியுள்ளது. ஐந்து பிரதேச செயலகங்களில் (கிளிநொச்சி, மாத்தறை, மட்டக்களப்பு, குருணாகலை, அம்பாறை) இருபத்தைந்து வழக்கு முகாமையாளர்களுக்கான முழுமையான பயிற்சிகள் இழப்பீட்டு அலுவகத்தோடு இணைந்து பணியாற்றும் துறைசார் வல்லுணர்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

x. தீர்மானங்களை மேற்கொள்வதற்கு பெறுமதியான தரவுகளை பெற்றுக் கொள்ளும் நோக்கிலும் மற்றும் இழப்பீடுகள் வழங்கப்பட்டமை தொடர்பான உறுதிப்படுத்தப்பட்ட தரவுகளை தேவையேற்படும் போது மீளப்பெற்றுக் கொள்ளும் நோக்கிலும் இழப்பீட்டு அலுவலகத்தின் தரவுத்தளம் புதுப்பிக்கப்பட்டது. முழுமையாக மையப்படுத்தப்பட்ட தரவுத்தளமானது பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீடுகள் குறித்த உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதோடு இழப்பீட்டு நிதியத்தின் செயற்பாடுகள் மற்றும் ஆவணப்படுத்தல்களை கணனிமயப்படுத்தவும் உதவும்.

xi. ஒற்றுமையை பலப்படுத்தி நல்லிக்கத்தை ஏற்படுத்தி வன்முறைகளை தடுப்பதே இழப்பீடு வழங்களின் உயர் நோக்கமாகும். இழப்பீட்டிற்கான அலுவலகமானது தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் (ONUR) மற்றும் காணாமற் போனவர்கள் தொடர்பிலான அலுவலகம் (OMP) என்பவற்றை ஒருங்கிணைத்து அவற்றின் திட்டங்களை சமாதானத்தை மேம்படுத்தல், ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாக மாற்றுவதற்கான தலைமைத்துவத்தை வழங்கியுள்ளது. ஒவ்வொருவரினதும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் ஒன்றுப்பட்டு செயற்படுவதற்கும், ஒரே விடயம் மீண்டும் செய்யப்படுவதை தடுப்பதற்கும் ஒழுங்குப்படுத்தப்பட்ட சந்திப்புக்களை தொடர்ந்தேரச்சியாக ஏற்பாடு செய்து வருகின்றது.

**<u>தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கான செயலகம் (ONUR)</u>**

03. தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கான செயலகம் (ONUR) தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை கட்டியெழுப்ப 8 கருப்பொருட்களின் அடிப்படையில் பின்வருமாறு தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றது:

i. நல்லிணக்கத்திற்கான கல்வி
   - மும்மொழிகளிலுமான இணையவழி நூலக வசதிகளை ஏற்படுத்தி இளைஞர் நூலக அமைப்புக்களை தாபித்தல்
   - மும்மொழி சிநேகப்பூர்வ பாடசாலைகளை அடையாளங்காணல்
   - இரு மொழி பயிற்சி பட்டறைகளை நடாத்துதல் (சிங்களம்/தமிழ்)

ii. நல்லிணக்கத்திற்கான உயர்கல்வி மற்றும் ஆய்வுகள்
   - ONUR இன் முதலாவது வருடாந்த மாநாட்டை கூட்டுதல்
   - நல்லிணக்கம் குறித்த ஆய்வுகள், கற்கைகளை மேற் கொள்ளல்

iii. நல்லிணக்கத்திற்கான கலை மற்றும் கலாச்சாரம்

- தெரிவு செய்யப்பட்ட பல்-மத மற்றும் கலாச்சார பண்டிகை கொண்டாட்டங்கள் (உதாரணம் - 2021 ஜுலை ஹஜ் பெருநாளை கொண்டாட தொலைக்காட்சி மற்றும் வனொலி நிகழ்ச்சிகளை ஒளி/ஒலிபரப்பல்)

iv. மோதல் நிலைமாற்ற நிகழ்ச்சித் திட்டங்கள்

- பிரதேச செயலகங்களின் ஊடாக நடைமுறைப்படுத்துவதற்கான மாவட்ட ரீதியான செயற்திட்டங்களை தயாரித்தல். நல்லிணக்கம் தொடர்பிலான ஒரு நாள் செயலமர்வை 8 மாவட்டங்களில் நடாத்துவதற்கான செயற்றிட்டம்.
- இணைப்பாளர்கள் மற்றும் செயற்றிட்ட வழிகாட்டல் உத்தியோகத்தர்களுக்கான திறன் மேம்பாட்டு செயலமர்வுகளை மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் நடாத்துதல். இதற்காக 17 மாவட்டங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதோடு 951 செயலமர்வுகளை 2021 ஆகஸ்ட் தொடக்கம் ஒக்டோபர் வரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
- கிராம மட்டத்திலான நல்லிணக்க குழுக்களை ஸ்தாபித்தல்
- முன்கூட்டியே எச்சரிக்கை செய்யும் முறைமைகளை உருவாக்கல்

v. நல்லிணக்கத்திற்கான ஊடகங்கள் மற்றும் தொடர்பாடல்

- உதாரணம்: ஒரு பாகத்தை மாத்திரம் கொண்ட தொலைக்காட்சி நாடகம் ஜுலை 2021 எசல போய தினத்தில் ஒளிபரப்பப்பட்டது.

vi. விருளிய சக்தி (இராணுவ விதவைகள் மற்றும் குடும்பத்தினருக்கான நிகழ்ச்சித் திட்டம்)

- இராணுவ விதவைகள் மற்றும் குடும்பத்தினருக்கான வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்கள்.

vii. பொருளாதார ஈடுபாட்டுடன் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் (REEP)

- இரண்டு (2) திட்டங்கள் செயலாக்கத்தின் கீழ் உள்ளது. உதாரணம்: மோதலால் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதூடாக நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் மோதலினால் பாதிக்கப்பட்ட அதிக கஷ்டத்தில் இருக்கும் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குதல் - இதற்கான திட்டமுன்மொழிவுகள் வடக்கு மற்றும் கிழக்கு மாவட்ட செயலகங்களிலிருந்து கோரப்பட்டுள்ளன. இந்த திட்டங்களுக்கு திட்டமுன்மொழிவுகள் வடக்கு மற்றும் கிழக்கு மாவட்ட செயலகங்களிலிருந்து கோரப்பட்டுள்ளன.

viii. உளவியல் உதவிகள் நிகழ்ச்சித்திட்டம்.

- பிரதேச செயலக மட்டத்திலான பிரதேச செயலக உளவியல் ஆதரவு அதிகாரிகளின் திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டம்
- பயனாளர்களை கண்காணித்தலும் மதிப்பிடலும்.

04. இந்த நிகழ்ச்சித்திட்டங்களில், மாவட்ட மட்டத்திலான நல்லிணக்க நிகழ்ச்சித்திட்டமே ONUR இன் மிக முக்கிய நிகழ்ச்சித் திட்டமாகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான விளைவாக இலங்கையின் அனைத்து கிராம சேவக பிரிவுகளையும் உள்ளடக்கிய சமூக கட்டமைப்பொன்றை கட்டியெழுப்புவதாகும். சமூக கட்டமைப்பானது, பிரதேச, மாவட்ட, மற்றும் தேசிய மட்டத்திலான நல்லிணக்க குழுக்களையும் அதன் செயற்பாடுகளையும் உள்ளடக்கி முழுமைப் பெறும். இந்த வருடத்திற்குள் ஆகக் குறைந்தது 500 கிராம சேவகப்பிரிவு மட்டத்திலான குழுக்களை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த செயற்றிட்டமானது நல்லிணக்க செயற்பாடுகளில் பங்கேற்கும் சமூகத்தின் கீழ் மட்டத்திலிருந்து 5000 தலைவர்களை உருவாக்கும். இது தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கான செயலகத்தின் (ONUR) செயற்றிட்ட கூறுகளின் தேசிய உரையாடல் மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்பல் சார் மிகப் பிரதானமான விடயப்பரப்போடு ஒத்தியங்கும் அம்சமாகும். இன வன்முறைகள் மோதல்கள் மீள எழாதிருப்பதை உறுதி செய்யவும், சமூக விழுமியங்கள் மற்றும் சமூகப் பொறுப்பினை நிலைநிறுத்துவதூடாக நாட்டில் சமூக மட்டத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் ONUR இன் நோக்கத்தின் ஆரம்ப படிக்கல்லாகும்.

05. நல்லிணக்கத்திற்கான தேசிய மட்டத்திலான செயற்றிட்டமொன்றை தயாரித்தல் ONUR இன் இரண்டாது மிகப் பெரிய செயற்றிட்டமாகும்; இது 25 மாவட்டங்களிலிருந்து 5000 பங்குப்பற்றுனர்களை சென்றடையும் என்பதோடு நிலவுகின்ற கொவிட் 19 தொற்று நிலைமைகளைக் கருத்திற் கொண்டு இத்திட்டம் இணைய வழியாக நடாத்தப்படும். இத் தேசிய செயற்றிட்டமானது இலங்கையின் தேசிய நல்லிணக்க கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டமையும். இந்த இலக்கானது ONUR இன் தேசிய ஒருமைப்பாடு குறித்த பங்கிடப்பட்ட நோக்கிற்கு இயைபான வகையில் இந்த வருடத்திற்குள் பூரணப்படுத்தப்படும் (ஆகஸ்ட் - டிசம்பர் 2021).

06. ONUR ஆனது தனது முதலாவது சர்வதேச ஆய்வு மாநாட்டினை ஏற்பாடு செய்கின்றது. இது ONUR இற்கு சர்வதேச கல்வியியல் மற்றும் ஆய்வு சமூகத்திடையே புதிய பாதையை ஏற்படுத்தித் தரும். இந்த மாநாடானது தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் குறித்த செய்திகளை சர்வதேச சமூகத்திற்கு கொண்டு சேர்க்கும், அத்தோடு தேசிய மட்டத்தில் நல்லிணக்க செயற்பாடுகளை சர்வதேச சமூகத்திற்கு இடையிலும் மக்கள் மயப்படுத்தும். ONUR இன் முதலாவது சர்வதேச ஆய்வு மாநாடானது ‘‘புரிந்துணர்வு ஊடாக வேற்றுமைகளை அகற்றுதல்: நவீன சமுதாயத்தில் நிலையான சமாதானம், பாதுகாப்பு மற்றும் நல்லிணக்கம்’’ என்ற கருப் பொருளில் 2021 ஒக்டோபர் மாதம் 30 மற்றும் 31 ஆந் திகதிகளில் ஒழுங்கு செய்யப்பட இருக்கின்றது. மேற்குறித்த மாநாட்டிற்கான ஆரம்பகட்ட பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அதேவேளை சர்வதேச துறை வல்லுணர்கள் இந்த மாநாட்டில் வளவாளர்களாக கலந்துக் கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர்.

07. ONUR ஆனது கடந்த ஆறு மாதக் காலப்பகுதியில் 1000 நேரடி அரசாங்க மட்ட மற்றும் அடிமட்ட செயற்பாட்டு பங்குதாரர்களை சென்றடைந்தது என்பதோடு அவர்களுடனான உறவினை மீளக்கட்டியெழுப்ப உறுதுணையாக இருந்ததோடு, ONUR முன்னெடுக்க இருக்கும் புதிய செயற்றிட்டங்கள் குறித்து அவர்கள் அறிந்து கொள்வதற்கும் உதவியாக அமைந்தது. கடந்த ஐந்தாண்டு காலப்பகுதியல் ONUR இனால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளின் காரணமாக அரச அதிகாரிகள் மற்றும் அடிமட்ட சமூக தலைவர்களின் பொறுப்புணர்வு மற்றும் அர்ப்பணிப்பு தன்மையில் ஒரு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என கொள்ள முடியும். இது இலங்கையின் அடிமட்ட சமூகங்கள் நல்லிணக்க செயற்பாடுகளில் கொண்டுள்ள நம்பிக்கையை புடம் போட்டுக் காட்டுவதோடு இதன் தொடர்ந்தேர்ச்சியான வெற்றிக்கான அவர்களது எதிர்ப்பார்ப்புக்களையும் காட்டி நிற்கின்றது.

08. கொவிட் 19 தொற்று நிலைமைகளின் காரணமாக, ONUR ஆனது எதிர்பாராத தாமத நிலைமைகளுக்கு முகங் கொடுக்க வேண்டி ஏற்பட்டதோடு இந்த வருடத்திற்கென திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் சிலவற்றில் தடைகளும் ஏற்பட்டன. அவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் எதிர்வரும் வருடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இயலுமான நிகழ்ச்சிகள் மற்றும் நிகழ்ச்சி திட்டங்கள் இணைய வழியாக கொண்டு செல்ல அல்லது நடாத்தப்படும்.

**நிலைப்பேண் அபிவிருத்தி இலக்குகள் (SDGs)**

09. 2021ஆம் ஆண்டிற்கான நிலைப்பேண் அபிவிருத்தி அறிக்கையின் படி 2021ஆம் ஆண்டின் நிலைப்பேண் அபிவிருத்தி இலக்குகள் குறித்த தரவரிசையின் 165 நாடுகள் பட்டியலில் இலங்கை 7 இடங்கள் முன்னேறி 87வது இடத்தை பெற்றுள்ளது.[4] நிலைப்பேண் அபிவிருத்தி இலக்குகள் குறித்த தேசிய வழிகாட்டற் சபையானது மாண்புமிகு பிரதமர் அவர்களால் தலைமைத் தாங்கப்படுவதோடு 14 அமைச்சர்களையும் உள்ளடக்கியுள்ளது. நிலைப்பேண் அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்த தேவையான மூலோபாயங்கள் மற்றும் வழிகாட்டல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நிலைப்பேண் அபிவிருத்தி இலக்கிற்கான கவுன்சிலானது தகவல் சேகரிப்பு முறைமையினை பலப்படுத்துவதோடு நிலைப்பேண் அபிவிருத்தி இலக்குகளை ஒருங்கிணைத்து மேற்பார்வை செய்யும். நிலைப்பேண் அபிவிருத்தி இலக்குகள் குறித்த தேசிய வழிகாட்டற் சபையானது எதிர்வரும் 2021 ஆகஸ்ட் மாதம் கூட்டப்படும்.

---

[4] https://sdgindex.org/reports/sustainable-development-report-2021/

10. மனித உரிமைகளோடு நேரடி பொருத்தப்பாட்டோடு கூடிய, நிலைப்பேண் அபிவிருத்தி இலக்கு 16 இற்கான ஒரு வழிகாட்டற் சபையானது மாண்புமிகு நீதி அமைச்சர் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டதோடு அது தேவையான சகல அரசாங்க தாபனங்களையும் ஒருங்கிணைத்து ஒன்றுப்படுத்தி நிலைப்பேண் அபிவிருத்தி இலக்கு 16 குறித்த இலங்கையின் முன்னெடுப்புக்களை துரிதப்படுத்துவற்கு நீதி மற்றும் சமாதானத்தோடு கூடிய நிறுவனங்களை மனித உரிமைகள், சட்டவாட்சி மற்றும் நீதியை அடைதல் உள்ளிட்ட கருப்பொருட்களின் அடிப்படையில் ஊக்குவிக்கின்றது. வழிகாட்டற் சபையின் 2021 ஜுன் 30 திகதிய கூட்டத்தின் பின்னர் பிரதான நிறுவனங்களான குற்றக் கட்டுப்பாடு, ஊழல் கட்டுப்பாடு, நீதியை அடைதலை பலப்படுத்தல் மற்றும் பொதுச் சேவை விநியோகம் என்பவற்றை உள்ளடக்கி, நேர வரம்புகளுடன் கூடிய வண்ணம் செயற்றிட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தி நிலைப்பேண் அபிவிருத்தி இலக்கு 16 இன் நோக்கங்களை அடைவதற்கு 4 உப குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**<u>தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு</u>**

11. தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு அரசியலமைப்பால் கட்டளையிடப்பட்ட நடைமுறைக்கு ஏற்ப மறுசீரமைக்கப்பட்டதுடன் அதன் சட்டபூர்வமான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டுள்ளன. இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு புதிய பிராந்திய அலுவலகங்களை நிறுவுவதற்காக வருடாந்த பாதீட்டில் நிதி ஒதுக்கீடும் கோரப்பட்டுள்ளது.

**<u>விசாரணைக்கான ஜனாதிபதி ஆணைக்குழு</u>**

12. பொறுப்புக் கூறலின் மீது, சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் ஏனைய தீவிரமான குற்றங்கள் குறித்து விசாரணை செய்து பரிந்துரைகளை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட முன்னைய ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்களின் விசாரணைகள், கண்டுபிடிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் என்பனவற்றை விசாரிப்பதற்காக நீதிபதி திரு நவாஸ் அவர்களின் தலைமையில் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின்[5] அறிக்கையானது 2021 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 21 ஆம் திகதி அதிமேதகு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. ஆணைக்குழுவானது அதனது இறுதி அறிக்கையினை அடுத்த 6 மாதங்களில் (2022 ஆம் ஆண்டு ஜனவரி) சமர்ப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**<u>பொறுப்புக் கூறுதல்</u>**

13. குறித்த ஆணைக்குழுக்களால் கண்டறிப்பட்டதன் படி, சர்வதேச மனித உரிமை சட்ட மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் நடந்திருக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்தவதற்காக முன்னைய ஆணைக்குழுக்களின்[6] கண்டுப்பிடிப்புக்களை ஆய்வு செய்வதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய விசாரணைக் கண்டுபிடிப்புக்கள் காணப்படுமிடத்து, பொறுப்புக்கூறல் குறித்த முன்னைய ஆணைக்குழுக்களின் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டதா மற்றும் எதிர்காலத்தில் பொறுப்புக்கூறலின் நோக்கங்களுக்காக என்னனென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பவற்றை அறிந்து கொள்வதற்கு ஆணைக்குழு கட்டாயப்படுத்தப்படுகிறது.

---

[5] விசாரணைக்கான ஆணைக்குழுவானது 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதி வெளியிடப்பட்ட மேலதிக வர்தமாணி மூலம் நியமிக்கப்பட்டது. http://www.documents...........................

[6] காணாமல் போனோர், 2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி முதல் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள்(16 குறிப்பிடத்தக்க வழக்குகள்) தொடர்பில் விசாரணை மற்றும் புலன்விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட இடைகால ஆணைக்குழு(உடலகம ஆணைக்குழு): கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (2010), காணாமல் போனோர் தொடர்பிலான புகார்களை விசாரிப்பதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு (பரணகம ஆணைக்குழு)(2013), மற்றும் காணாமலாக்கப்பட்டோர் மற்றும் கடத்தப்பட்டோர் தொடர்பிலான புகார்களை விசாரிப்பதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு (2014) 11 (பரணகம ஆணைக்குழுவின் இரண்டாவது ஆணையம்) போன்ற பொறுப்புக் கூறல் பிரச்சினைகள் தொடர்பில் நியமிக்கப்பட்ட முன்னைய உள்நாட்டு ஆணைக்குழுக்களை உள்ளடக்கிய ஆணைக்குழு.

14. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் பரணகம ஆணைக்குழு என்பன பொறுப்புக் கூறல் குறித்த கேள்விகளை எதிர்கொண்டன என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். முன்னைய ஆணைக்குழுக்கள் கூட பொறுப்புக் கூறல் தொடர்பில் பதிலளிக்க ஆணையாளர்களை அழைத்தமை குறிப்பிடத்தக்கது. தற்போதைய ஆணைக்குழு, அதன் இடைக்கால அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதன் படி பொறுப்புக்கூறல் தொடர்பில் காணப்படும் பிரச்சினைகளை ஆராய்ந்து எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து குறிப்பிட வேண்டும். தற்போதைய ஆணைக்குழுவானது அதன் இடைக்கால அறிக்கையில் தெளிவாக கூறப்பட்டுள்ளபடி பொறுப்புக்கூறல் பிரச்சினைகளை ஆராய்ந்து எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கூறுகிறது என இலங்கை சொல்கிறது.

15. முன்னைய ஆணைக்குழுவால் ஆராயப்பட்ட பொறுப்புக் கூறல் வினாக்களை மறுபரிசீலனை செய்வது கட்டாயமாக்கப்பட்டதனை தெளிவாக கூறும் உள்நாட்டு பொறிமுறையின் பரிந்துரைகளை அமுல்ப்படுத்த இலங்கை தயாராகவுள்ளது.

<u>பயங்கராவத தடைச் சட்டம்</u>

16. ஆணைக்குழுவானது பல பிரச்சினைகளை விசாரித்ததுடன் பின்வரும் இடைக்கால பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

    i. ஏனை நாடுகளில் தீவிரவாதத்திற்கு எதிராக காணப்படும் சட்டங்களை போலவே இலங்கையின் பயங்கரவாத தடைச் சட்டத்தினை மாற்றியமைக்க வேண்டும் என்ற பரிந்துரையினை ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையில் அடிக்கோடிட்டுக் காட்டியிருக்கிறது. ஆணைக்குழுவானது பயங்கரவாத தடைச் சட்டத்தின் பிரிவுகள் 9, 11 மற்றும் 13 தொடர்பில் அதீத கவனம் செலுத்தியிருக்கிறது. அத்துடன் பயங்கரவாத தடைச் சட்டத்தினை அதிக ஜனநாயகத்துடன் நடைமுறைப்படுத்தும் வகையிலான முக்கிய மூன்று பரிந்துரைகளை செய்திருக்கிறது. பயங்கரவாத தடைச் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் குறைந்த பட்சம் 3 மாத காலங்கள் அல்லது அதற்கு அதிக காலங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை பதிவு செய்து வழக்குகள் விசாரிக்கப்படுவதை துரிதப்படுத்த வேண்டும் என்ற விடயத்தை ஆணைக்குழு குறித்துக் காட்டுகிறது, மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் பிரிவு 11 இன் கீழ் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்காது விஷேட பாதுகாப்பின் கீழ் அவர்களை அவர்களது வீடுகளில் அல்லது வீடுகள் அமையப்பெற்ற இடத்தில் தடுத்து வைத்தல் தொடர்பில் அறிக்கையில் பேசப்பட்டுள்ளது.

    ii. ஆணைக்குழுவானது தனது இடைக்கால அறிக்கையில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் பிரிவு 13 இன் கீழ் ஜனாதிபதிக்கு அல்லது பாதுகாப்பு அமைச்சருக்கு ஆலோசனை வழங்கும் வகையில் மூன்று உறுப்பினர்களுக்கு குறையாத நபர்களைக் கொண்ட ஆலோசனைச் சபையினை நிறுவுமாறு பிரேரித்தது. அதிமேதகு ஜனாதிபதி அவர்கள், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் மதிப்பிற்குரிய அசோக டி சில்வா அவர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் பிரிவு 13 இன் படி ஆலோசனைச் சபையின் தலைவராகவும் மேலும் இருவரை உறுப்பினராகவும் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி நியமித்தார். தடுப்புக் காவலில் வைப்பதற்காக கட்டளைப் பிறப்பிக்கப்பட்ட எவரேனும் அல்லது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டு கட்டளை விதிக்கப்பட்டவர் அல்லது அவரை/அவளை பிரதிநிதித்துவப்படுத்தும் எவரேனும் ஆலோசனை சபைக்கு சமூகம் தர முடியும். ஆலோசனை சபையானது வழங்கப்பட்ட கட்டளை தொடர்பில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்கலாம். எனவே, இந்த சபையானது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படுதலுக்காக கட்டளை பிறப்பிக்கப்பட்டவர் அல்லது கட்டுப்பாட்டு விதிக்கப்பட்டவர் தனக்கு வழங்கப்பட்ட கட்டளையை மீள்பரிசீலனை செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கும் வாய்ப்பினை வழங்குகிறது.

**பயங்கரவாத தடைச் சட்டத்தினை மறுபரிசீலனைச் செய்தல்**

17. தற்போதுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் காணப்படுகின்ற இடைவெளிகளை பூர்த்தி செய்யவும், இது தொடர்பான இலங்கையின் சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள் மற்றும் சர்வதேச பழக்கங்களின் ஊடாக நாட்டின் தேசிய பாதுகாப்பிற்காக இலங்கையின் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் அளவுகோளின் சமனிலையை உறுதிப்படுத்தும் பொருட்டும் பயங்கரவாத தடைச் சட்டத்தினை மறுப்பரிசீலனை செய்வதற்காக அமைச்சரவை உப குழுவும், குறித்த அமைச்சரவை உபகுழுவிற்கு உதவுவதற்காக ஒரு அலுவலலர்கள் குழுவும் நிமிக்கப்பட்டன. உப குழுவானது, நீதி அமைச்சு, சட்ட வல்லுநர்கள் மற்றும் பாதுகாப்பு படைகளை உள்ளடக்குகிறது, அவர்கள் மூன்று மாதத்தினுள் (24 செப்டெம்பர் 2021) அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அலுவலர்கள் குழுவானது தனது ஆலோசனை வழங்கும் வேலையினை ஆரம்பித்துள்ளது.

18. பயங்கரவாத தடைச் சட்டத்தை பொறுத்தவரையில், அரசாங்கமானது தனது ஆலோசனை செயன்முறையை விரிவாக்கவும் திறன்பட செய்வதற்கும் சிவில் சமூகம் போன்ற பங்குதாரர்களையும், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் போன்ற தொழில்முறை சங்கங்களையும், இலங்கை தேசிய பல்கலைக்கழகத்தின் சட்ட பீடங்கள் போன்ற கல்வியியல் நிறுவனங்களையும் உள்ளடக்குகிறது. இந்த முயற்சியில் கட்சி சார்பற்ற அணுகுமுறை பின்பற்றப்படுவதை அரசாங்கம் உறுதி செய்யும்.

**குற்றத் தீர்ப்பளிப்பட்டவர்களை மன்னித்தல். உதாரணமாக, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள்**

19. பயங்கரவாத அமைப்பின் உறுப்பினராக செயற்பட்டு கடுமையான குற்றங்கள் பல புரிந்தமைக்காக குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்பட்ட பதின்னாறு (16) தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும், பயங்கரவாத தடைச் சட்டத்துடன் தொடர்புடைய குற்றங்களுக்காக குற்றஞ்சுமத்தப்பட்டு கட்டுக்காவலில் வைப்பதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டு நீதிமுறை கட்டுக்காவலில் தடுத்து வைக்கப்பட்டவர்களை விடுதலை செய்வதற்கான சட்ட மற்றும் நிர்வாக ரீதியான செயன்முறைகள் அமுலில் உள்ளன.

**உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழ்பவர்களை மீளக்குடியமர்த்தல்.**

20. உள்நாட்டில் இடம் பெயர்ந்து வாழும் மக்களில் மீளக்குடியமர்த்தப்படாது எஞ்சியிருப்பவர்கள் தொடர்பில் கணக்கெடுத்து அவர்களை மீளக் குடியமர்த்தவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன மற்றும் அரச காணிகளாக எடுத்துக் கொள்ளப்பட்ட காணிகளின் சொந்தக்காரர்களுக்கு பொருத்தமான நஷ்டஈட்டினை (வீட்டு வசதி வழங்குதல் ) தொடர்பில் பரிசீலிப்பதற்கான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

    i. 26 ஆம் திகதி ஆகஸ்ட் மாதம் 2021 ஆம் ஆண்டின் கணக்கின் படி மொத்தமாக 9,190 நபர்கள் (3,174 குடும்பங்கள் ) மீளக் குடியமர்த்தப்படுவதற்காக எஞ்சியிருக்கின்றனர். அதில் 1,176 நபர்கள் (344 குடும்பங்கள்) நலன்புரி நிலையங்களில் வாழ்வதுடன் 7,182 நபர்கள் (2,615 குடும்பங்கள்) உறவினர்களுடனோ அல்லது நண்பர்களுடனோ வாழ்கின்றனர். உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழ்பவர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வினை காண்பதற்காக மீளக்குடியமர்த்தப்படாது இருப்பவர்களின் எண்ணிக்கையை கணிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

    ii. 2009 ஆம் ஆண்டு ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை, வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் பயனாளிகளுக்கு வழங்கவென 1,46,812 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி கணக்கின் படி 54,017 வீடுகள்

வடக்கு கிழக்கைச் சேர்ந்த பயனாளிகளுக்கு கொடுக்கவென கட்டப்படவிருக்கின்றன. 2021 ஆம் ஆண்டிக் வரவு செலவுத் திட்டத்திலிருந்து 4112.66 மில்லியன் பணத் தொகை வடக்கு கிழக்கு பிராந்தியங்களின் உட்கட்டமைப்பு வகசிகளை விருத்தி செய்யவென ஒதுக்கப்பட்டுள்ளது.

**<u>நிலத்தை விடுவித்தல்</u>**

21. முறையான நில விடுவிப்பு நடவடிக்கைக்கு ஏற்ப நாட்டில் முக்கியமானதாக கருதப்படும் தேசிய பாதுகாப்பிற்கு பங்கம் ஏற்படாத வகையில், பாதுகாப்பு படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு மீள வழங்கப்படாது எஞ்சியிருக்கும் தனியார் காணிகளை விரைவாக விடுவிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் தலைமையில் ஏற்கனவே நவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

i. முன்பு பாதுகாப்புப் படையினரிடம் இருந்த நிலங்களில், 89.26% ஆன அரசக் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன, மற்றும் 92.22% ஆன தனியார் காணிகள் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி நிலங்களின் உரிமையாளர்களான பொது மக்களிடம் விடுவிக்கப்பட்டுள்ளன.

ii. இலங்கை இராணுவமானது போர் காலத்தில் கைப்பற்றிய நிலங்களில் அண்ணளவாக 90.82% ஆன நிலங்களை 2009 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஜுன் மாதம் வரையில் விடுவித்திருக்கிறது.

iii. இலங்கை இராணுவமானது 25.73 ஏக்கர் தனியார் நிலத்தை 2021 ஆம் ஆண்டு ஜுன் 30 இற்கும் ஜுலை 28 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் விடுவித்திருந்தது.

iv. நிலத்தில் கனிசமானளவு பலாலி சர்வதேச விமான நிலைய அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

v. மேலும் கவனிக்கப்பட்ட வேண்டிய விடயம் என்னவென்றால், பொது மக்களின் இடங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளால் வெடிக்காத வெடிப்பொருட்கள் மற்றும் நிலக்கண்ணி வெடிகள் பதிவில் இல்லாத வகையில் வைக்கப்பட்டிருந்தன. அவை நிலங்களை மாசடையச் செய்ததுடன் வடக்கு மற்றும் கிழக்கு பகுதியின் 98.7% ஆன நிலங்களிலிருந்து குறித்த வெடிக்காத வெடிப்பொருட்கள் அகற்றப்பட்டிருக்கின்றன, அதன் காரணமாக நிலத்தை மீளப் வழங்கும் மீள் குடியேற்றும் நிகழ்ச்சித் திட்டமானது எளிதாக்கப்பட்டுள்ளது.

vi. தற்போது, 2009 இல் யுத்தம் முடிவுற்றக் காலப்பகுதியில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த தனியார் நிலங்களில் பெரும்பாண்மையானவை (92% இற்கும் அதிகமான) உள்ளுராட்சி அதிகாரசபையினூடாக இராணுவத்தினரால் நிலத்திற்கு நெறிமுறையாக சொந்தம் கொண்ட பொது மக்களுக்கு விடுவிக்கப்பட்டது.

vii. மீதமுள்ள நிலத்தை விடுவிப்பதானது, வடக்கு மற்றும் கிழக்கில் காணப்படும் பாதுகாப்பு படை நிறுவனங்களின் தந்திரோபாயத் தேவைகளை கருத்திற்கொண்டு, நிலம் ஒப்படைத்தல் அல்லது ஒப்படைக்காது விடுதல் சட்டத்தால் வழங்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் நடைமுறைகளுக்கு உட்பட்டதாகும்.

viii. இந்த அம்சங்களை கவனித்துப் பார்க்கும் போது, நிலத்தை விடுவிக்கும் முறையான செயற்பாட்டின் படி எஞ்சியிருக்கும் தனியார் காணிகளை விரைவான விடுவிப்பதற்கான செயன்முறையானது ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும், விடுவிக்கப்பட முடியாத தனியார் நிலங்களுக்கு பதிலாக பொருத்தமான முறையில் நஷ்டஈடு வழங்குவதற்கான செயன்முறையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

ix. மேலே சொல்லப்பட்டவற்றிற்கு மேலதிகமாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலங்களை மீள வழங்கும் செயன்முறையை உறுதிப்படுத்துவதற்காக வேலை செய்யும் அனைத்து அரசாங்க அதிகார சபை அலுவலர்களும் தமிழ் அரசாங்க அலுவலர்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**சிவில் சமூகத்துடனான பிணைப்பு**

22. சமூக மற்றும் மனித அபிவிருத்தி போலவே மனித உரிமைகள் தொடர்பான விடங்களின் முன்னேற்றங்களில் இலங்கையின் முக்கியமான பங்குதாரராக சிவில் சமூகம் கடந்த தசாப்தங்களாக இருந்து வருகிறது. சர்வதேச மனித உரிமைகள் அறிக்கையிடல் கடமைகளுக்காக சிவில் சமூகங்களுடன் நாங்கள் உயிரோட்டமான தொடர்பினை பேணியிருக்கிறோம். மேலும், அதனை தொடரும் வகையில், அதி மேதகு ஜனாதிபதி மிகப் பரந்தளவிலான சிவில் சமூகத்துடன் (இலங்கையின் ஒரு மித்தக் கருத்து கொண்ட சிவில் அமைப்புக்களின் கூட்டு) 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி ஒரு கலந்துரையாடலை நடாத்தியதுடன், தற்போது காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் அவர்களது அக்கறைகளும் பெறப்பட்டன.

**சர்வதேச மனித உரிமைகளும் ஏனைய ஒப்பந்தங்கள் குறித்தான கடமைகளும் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு நடைமுறைகளுக்கான ஆணையாளருடனான பிணைப்பு.**

23. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஒப்பந்தங்களின் 9 ஆம் மையக் கருத்திற்கு கீழ், தற்போது நடைமுறையிலிருக்கும் அறிக்கையிடல் கடமையினை பூர்த்தி செய்வதை இலங்கைத் தொடர்ந்து செய்ய வேண்டும். இந்த ஒப்பந்தங்களின் பல அறிக்கைகள்/கருத்துக்களை சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன, இதில் CEDAW வின் கீழான இலங்கையின் 9 ஆவது கால அறிக்கையை சமர்ப்பித்தல் மற்றும் ICCPR இன் கீழான இலங்கையின் 6 ஆவது கால அறிக்கை என்பன உள்ளடங்குவதுடன் 6 ஆவது கால அறிக்கையை மதிப்பாய்வு செய்வதானது மார்ச் மாதம் 2022 இல் தற்காலிகமாக நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

24. தனிநபர் கண்ணிவெடி எதிர்ப்பு மாநாட்டின் படி, திட்டமிடப்பட்ட காலக்கெடுவிற்கு ஒரு வருடம் முன்னதாகவே அனைத்து கண்ணி வெடிகளையும் இல்லாது அழிக்கும் செயன்முறையை இலங்கை நிறைவு செய்தமையானது பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான நோக்கத்தை மேம்படுத்துவதற்கான எங்கள் முயற்சியின் ஒரு மைற்கல்லாக குறிப்பிட முடியும். எதிர்காலத்தில் இவ்வகையான கண்மூடித்தனமாக ஆயுதங்களை பயன்படுத்தக் கூடாது என்ற அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை இது மேலும் உறுதிப்படுத்துகிறது, மேலும் நல்லிணக்கத்தை மையமாகக் கொண்டு அமைதியான இலங்கையை உருவாக்குவதற்கான அரசாங்கத்தின் நம்பிக்கையை பிரதிபலிக்கிறது.

25. தேசிய மட்டத்திலான இந்த அளவுகோல்களுக்கு மேலதிகமாக, மனித உரிமைகள் பேரவையின் பொறிமுறைகளுடன் தொடர்ந்து இணங்கியிருப்போம் என்ற உறுதிமொழியினை நாங்கள் உண்மையாக பேணி வருகிறோம். அதன் படி, கடந்த வருடத்தில்(2020), இலங்கைக்கு இரு வகையான சிறப்பு நடைமுறைகளுக்கான ஆணையாளர்கள் வருகைத் தருவதற்கு வெளிப்படையாக உடன்பட்டிருந்தோம், அந்த வகையில், கல்வி உரிமை குறித்த சிறப்பு அறிக்கையாளர் மற்றும் அடிமைத்தனத்தின் சமகால வடிவங்களுக்கான காரணங்கள் மற்றும் விளைவுகள் குறித்த சிறப்பு அறிக்கையாளர்கள் வருகைக்கு உடன்பட்டிருந்தோம். தற்போதைய தொற்றுநோய் பரவல் காரணமாக இலங்கை பூட்டப்பட்டிருப்பதினால் அவர்களின் வருகை திகதிகளை நாங்கள் முடிவு செய்வதில் ஆணையர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.

வெளிவிவகார அமைச்சு
கொழும்பு.